[1990 மே 12

திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் குறிப்பிட்ட இந்த 6 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில், இரண்டு மாதங்களுக்கு முன்பாக உமையாள்புரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு டெக்னிக்கல் சாங்ஷன் வழங்கப் பட்டிருக்கிறது. அதற்கு அட்மினிஸ்டிரேடிவ் சாங்ஷன் வழங்கி நிறைவேற்றுவதோடு, மீதமுள்ள 5 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களையும் இந்த ஆண்டே நிறைவேற்ற அமைச்சரவர்கள் முன் வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசினுடைய நிதி நிலையைப் பொறுத்து இதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. ஏ. சி. தயாளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை, பாலாற்றிலிருந்து ஆரணிக்கு தண்ணீர் கொண்டுவர ஒரு திட்டம் முதலிலே படைக்கப்பட்டது. ஆனால் செய்யாற்றிலிருந்து ஆரணிக்குத் தண்ணீர் கொண்டு வந்தால் திட்டத்தின் மதிப்பீடு குறையும், வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த ஏதுவாக இருக்கும் என்று நான் மனு செய்திருந்தேன். அது பற்றி மதிப்பீடு தயாரிக்க அதிகாரிகளுக்கு அமைச்சரவர்கள் உத்தரவிட்டுள்ளார்களா ? அதை விரைவாக நிறைவேற்றித் தர அமைச்சரவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற இது போன்ற கருத்துக்கள் குறித்து குடிநீர் வடிகால் வாரியம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

ஆரம்ப சுகாதார நிலையம்

* 4266—திரு. ஆர். மூக்கன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வன்னாடு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே,

வன்னாடு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

9—40 மணி

திரு. ஆர். மூக்கன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, உப்பிலியாபுரம் தொகுதியில் துறையூர் ஒன்றியத்தைச் சேர்ந்த பச்சைமலையில் வன்னாடு, கோம்பை

1990 மே 12[

என்ற இரு நாடுகளிலும் சுகாதார வசதி இல்லாத காரணத்தினால் அங்கே உள்ள இந்து மலையாளி மக்கள் அனைவரும் தொட்டில் கட்டிக்கொண்டு தான் துறையூர் வந்து சிகிச்சை பெற்றுச் சென்று கொண்டு இருக்கிறார்கள். ஆகையினால் அங்கே ஒரு சுகாதார நிலையம் அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, துறையூர் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை சுமார் 90 ஆயிரம் ஆகும். 30 ஆயிரம் மக்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலே வீரமச்சான்பட்டி, பெருமாள்பாளையம், செங்காட்டுப்பட்டி ஆகிய 3 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. ஆகவே இப்போது அது குறித்து எந்தவிதமான செயற் குறிப்பும் அரசிடம் இல்லை.

திரு. ஆர். மூக்கன்: மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, துறையூரிலிருந்து பச்சைமலைக்குச் சென்றுவர கிட்டத்தட்ட 15 அல்லது 20 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. அவர்கள் பச்சைமலையிலிருந்து துறையூர் வந்துதான் சிகிச்சை பெற்றுக்கொண்டு சிரமப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆகையினால் அரசு மறுபரிசீலனை செய்து இந்து மலையாளி மக்களுக்கு உதவ அங்கே சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசின் நிதி நிலைக்கு ஏற்ப இதுபோன்ற திட்டங்களைப் படிப்படியாக அரசு மேற்கொள்ளும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஒட்டப்பிடாரம் அரசு மருத்துவமனை

* 6150—திரு எம். முத்தையா:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஒட்டப்பிடாரம் அரசு மருத்துவமனைக்கு ஆபரேஷன் தியேட்டரும், எக்ஸ்-ரே எடுப்பதற்கான வசதியும் செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.